தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 26, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 10, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

நம்மால் முடியுமா என்று மனத்தளர்ச்சி அடையாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும்.

(**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*)

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான திரு. எம். பழனியாண்டி அவர்கள் 8-3-2005 அன்று மறைவுற்ற செய்தியினை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. எம். பழனியாண்டி அவர்கள் அன்றைய ஒருங்கிணைந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 முதல் 1957 வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். மேலும், 1957 முதல் 1962 வரை மக்களவை உறுப்பினராகவும் 1986 முதல் 1992 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 256 முதல் 259 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 165 மற்றும் 166 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

3. வரவு–செலவுத் திட்டம், 2005–2006, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய